Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

MONDAY, JULY 24 2023

திங்கட்கிழமை, ஜூலை 24, 2023 | ஒளி: 09 கதிர் 046 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## காஸ் விலையை சமப்படுத்த சூத்திரம்

சமையல் எரிவாயுக்களான லாப்ஸ் மற்றும் லிட்ரோ ஆகிய எரிவாயுவின் விலைகள் சமமாக இருக்கும் வகையில் விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சந்தையில் லிட்ரோ எரிவாயுவின் விலையுடன் ஒப்பிடும் போது லாப்ஸ் எரிவாயுவின் விலைகள் அதிகம் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



தொடர்ச்சி P2



## தாயும் குழந்தையும் 17 நாட்களாக மாயம்

கடந்த 17 நாட்களாக காணாமல் போயிருக்கும் தாயையும் சிறு குழந்தையும் தொடர்ந்து தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஹேவாஹெட்ட, ரஹதுங்கொட, ரிவர்டேல் பகுதியில் வசித்து வந்த தாயும் குழந்தையுமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர். இது தொடர்பில் அவரது கணவன் ஹங்குரன்கெத்த பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தொடர்ச்சி P2



## இன்று ஆரம்பம்: ஓகஸ்ட் 27 விடுமுறை

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளுக்கான முதலாம் தவணை விடுமுறை ஜூலை மாதம் 21ஆம் திகதி வழங்கப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் இரண்டாம் தவணை கற்றல் செயற்பாடுகளின் முதற்கட்டம் திங்கட்கிழமை (24) ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி வரை இடம்பெறும்.

தொடர்ச்சி P2

## எம்.பிக்களின் வீட்டுத் தொகுதியில் மர்மநபர்

மாதிவெலயில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் வீட்டுத் தொகுதியிலுள்ள எம்.பி ஒருவரின் வீட்டுக்கு முன்பாக சந்தேகத்துக்கு இடமான முறையிலும் நடந்து திரிந்ததாகக் கூறப்படும் நபர் தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## புதனன்று அனைத்து கட்சி கூட்டம்?

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அனைத்து கட்சி கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

### சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு

## அமைச்சுப் பதவிகள் சிலவற்றை தாருங்கள்


ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், பெரமுன மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

### வீடு புகுந்து பெட்ரோல் குண்டுவீசி வாள்வெட்டு

# களேபரமானது பிறந்தநாள்

# பெண் பலி



# 10 பேர் காயம்

■ க.அகரன்

பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, இனந்தெரியாத குழுவொன்று வீடு புகுந்து, பெட்ரோல் குண்டை வீசி, தீ மூட்டி கொளுத்திவிட்டு, நடத்திய வாள்வெட்டு மற்றும் குண்டாந்தடி தாக்குதலில், பெண்ணொருவர் உயிரிழந்ததுடன், காயமடைந்த பத்து பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம், வவுனியா, தோணிக்கல் பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 21 வயதான பாத்திமா சம்மா சப்தீர் என்ற பெண் உயிரழந்துள்ளார். காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 10 பேரில், சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

தொடர்ச்சி P2








## வடக்கு பிரதேசத்தில் யானைக்கு கட்டுப்பாடு

■ எம்.றொசாந்த்

ஆலய உற்சவங்கள் மற்றும் ஏனைய விழாக்களுக்கு யானைகளைப் பயன்படுத்தும் போது உரிய அனுமதிகளை பெற வேண்டும் என யாழ் மாவட்ட செயலாளர் ஆ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அண்மைக்காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆலய உற்சவங்களின் போது, வேறு மாவட்டங்களில் இருந்து யானைகள் வரவழைக்கப்பட்டு, அவற்றை எந்த விதமான பாதுகாப்பு நடைமுறைகளும் இன்றி ஆலய திருவிழாக்கள் மற்றும் ஊர்வலங்களிலும் ஈடுபடுத்துவதனை காணக்கூடியதாக உள்ளது.

தொடர்ச்சி P2

## தேங்காய் எண்ணெய்க்கு புதிய வரி விதிப்பு



இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கு புதிய வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் லீட்டருக்கு 25 ரூபாய் வரி விதிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இவ்விரண்டுக்கே ரணிலுக்கு ஆதரவு




நாட்டின் பொருளாதாரம் மற்றும் ஜனநாயகத்தை கட்டியெழுப்பவே ரணில் விக்கிமரசிங்கவை ஜனாதிபதியாக்கியதாக ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அதன் அடிப்படையிலேயே போராட்டங்களுக்கு பின்னர் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார் என்று பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அறிக்கை விடுவதற்கு முன் சுற்றறிக்கையை பார்க்கவும்

திணைக்களத்தின் பிரதானிகளின் அனுமதியின்றி ஊடகங்களுக்கு தகவல்களை வெளியிடவோ அல்லது வழங்கவோ முடியாது என சுகாதார சேவையை சேர்ந்த அனைத்து அதிகாரிகளுக்கும் சுகாதார அமைச்சினால் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் பிரதானியின் அனுமதியின்றி ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் அனைத்து சுகாதார அதிகாரிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஆட்சிப்பீடமேறும் சக்தி மொட்டுக்கே உண்டு



ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்பது, இந்த நாட்டில் ஆட்சியை அமைக்கும் சக்தியாகும். அடுத்த அரசாங்கத்தை அமைக்கும்சக்தி மொட்டுக்கே உண்டு என்று பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பதுளையில் சனிக்கிழமை (22) நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இறாத்தல் பாணை பார்த்து வாங்கவும்

ஒரு பாணின் விலை மற்றும் நிறையை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## 50% கிடைக்காது

எதிர்காலத்தில் நடத்தப்படும் எந்தவொரு தேர்தல்களின் போதும், எந்த கட்சிக்கும் 50 சதவீதமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப-தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாவலப்பிட்டிய தொகுதி அமைப்பாளர் கூட்டம், சனிக்கிழமை (22) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எட்டுவதனால், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கின்றது. நாட்டின் பணவீக்கத்தை தனி இலக்கத்துக்கு கொண்டு வர தற்போதைக்கு தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. அதனால் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கிறது என்றார்.

## இளநீர் விற்றவருக்கு ரூ.10,000தண்டம்

■ ஷேன் செனவிரத்ன

ரயில் நிலையத்துக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் இளநீர் விற்பனை செய்து கொண்டிருந்த வியாபாரி, பகிரங்கமாக மதுபானம் பருகிவிட்டு தள்ளாடிக் கொண்டிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டார்.

கண்டி-மஹியாவரயில் நிலையத்துக்கு அருகிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## தாயும் குழந்தையும் 17 நாட்களாக மாயம்

22 இரண்டு வயதான வெள்ளையம்மா சுரேந்திரனி ராணி மற்றும் அவரது ஒரு வயதும் ஏழு மாதங்களேயான மகள் தருஷிகா அபி ஆகியோரே காணாமல் போயுள்ளனர்.

சுகயீனம் காரணமாக சிகிச்சை பெறுவதற்காக ரிகில்லகஸ்கட வைத்தியசாலைக்கு தனது குழந்தையுடன் கடந்த 17ஆம் திகதி சென்றவர் இது வரை வீடு திரும்பவில்லை என அவரது கணவர் மோகனசுந்தரம் சம்பத் குமார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி ரிகில்லகஸ்கட நகருக்கு பேருந்தில் சென்றதாகவும், ஊரைச் சேர்ந்த சிலர் அவ்விருவரையும் பார்த்ததாகவும் பலர் தன்னிடம் கூறியதாகவும் கணவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் அந்த பெண் மற்றும் குழந்தையை தொடர்ந்து தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இன்று ஆரம்பம் ஒகஸ்ட் 27 விடுமுறை

ஒகஸ்ட் 18 முதல் 27 வரையில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி வரையில் இடம்பெறும்.

மூன்றாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 24ஆம் திகதி வரை இடம்பெறும்.

அத்துடன், மூன்றாம் தவணை கற்றல் செயற்பாடுகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

## எம்.பிக்களின் வீட்டுத் தொகுதியில் மர்மநபர்

உறுப்பினர் காலையில் எழுந்து வீட்டுக்கு வெளியே வந்த போது, அங்கிருந்து சந்தேக நபர் தப்பிச் சென்றதாக தகவல் கிடைத்ததாக, பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாராளுமன்ற படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாண்டோவிடம் வினவிய போது, இந்த சம்பவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இச்சம்பவத்தின் பின்னர் உறுப்பினர் வீட்டுக்கு அருகிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த இராணுவ குழுவொன்று அதே வீட்டுத் தொகுதியில் உள்ள மற்றுமோர் இடத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இராணுவ அதிகாரிகள் குழு, மாதிவெலவில் வசிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பு வளாகத்துக்கு பாதுகாப்பு கடமைகளுக்காக கடந்த போராட்டத்தின் போது களமிறங்கியவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், மாதிவெலவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியில் இருந்து இந்த இராணுவத்தினரை அகற்றுவதற்கான உத்தரவு இன்னும் கிடைக்கப்பெறவில்லை என நரேந்திர பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

## அமைச்சுப் பதவிகள் சிலவற்றை தாருங்கள்


முன்னாள் அமைச்சர்கள் ஐவரின் பெயர்கள், அதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம். சந்திரசேன, சி.பி.ரத்னாயக்க மற்றும் விமல வீர திஸாநாயக்க ஆகியோரின் பெயர்களே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களுக்கு மேலதிகமாக, மஹிந்தானந்த அளுத்கமகே, ஜனக்க பண்டார தென்னக்கோன், எஸ்.பீ.திஸாநாயக்க, காமினி லொக்குகே ஆகியோரின் பெயர்களும் அந்த பட்டியலில் உள்ளக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# களேபரமானது பிறந்தநாள்

# பெண் பலி



# 10 பேர் காயம்

உயிரிழந்த பெண்ணின் கணவனைத் தேடிச் சென்ற குழுவே தாக்குதல் நடத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் 119 அவசர இலக்கத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஸ்தலத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸாரும், வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினரும் மற்றும் பிரதேசவாசிகளும் இணைந்து தீயை அணைத்துள்ளனர்.

இளைய மகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது, நள்ளிரவு 12 மணியளவில் முகத்தை மூடிக்கட்டிக் கொண்டு திடீரென உள்நுழைந்த கும்பல், அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டியதுடன், அனைவர் மீதும் பெட்ரோல் ஊற்றியுள்ளனர்.

“எங்கே சுகந்தன்” எனக் கேட்டுக்கொண்டு தேடியபடியே அந்த கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

வீட்டின் மேல்மாடியில் இருந்த சுகந்தன், சத்தம் கேட்டு கீழே இறங்கி வந்தபோது, அவரை வெட்ட முயன்றுள்ளனர். எனினும், கணவனை காப்பாற்ற குறுக்கே சென்ற போதே 21 வயதான மனைவியும் சரமாரியான

வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

அதன் பின்னர் அவர்கள் மீது பெட்ரோல் ஊற்றி தீ மூட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதில் 21 வயதான மனைவி உயிரிழந்தார். கணவன் உயிராபத்தான காயங்கள், எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

02 வயதுடைய சிறுவன் மற்றும் 07,08 மற்றும் 13 ஆகிய வயதுகளுடைய மூன்று சிறுமிகள், 19 முதல் 41 வயதுக்கு இடைப்பட்ட நான்கு பெண்கள், 42 வயதுடைய ஆண் மற்றும் 36 வயதுடைய ஒருவரும் தீயில் சிக்கி காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த நபர்களுக்கு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளமையுடன் சந்தேகத்தின் பேரில் சிலரிடம் விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

அதனைத்தொடர்ந்து தடயவியல் பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டமையுடன் திடீர் மரணவிசாரணை அதிகாரி ம.கோகுல் சங்கர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து தடயங்களை பார்வையிட்டார்.

இதனையடுத்து வவுனியா பதில் நீதிபதி த. ஆர்த்தி சம்பவம் இடம்பெற்ற இடத்தை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டதுடன் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, அந்த வீட்டுக்கு வெளியே பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராக்கள் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, ஏதோவொரு திரவம் நிரப்பப்பட்ட இரண்டொரு கேன்கள், வீட்டுக்கு வெளியே உள்ள மின் கம்பத்துக்கு அருகில் இருந்தமையையும் அவதானிக்கக்கூடியதாய் இருந்தது.

## புதனன்று அனைத்து கட்சி கூட்டம்?

இந்த அனைத்து கட்சிக் கூட்டம், ஜனாதிபதி செயலகத்தில் புதன்கிழமை (26 ) பிற்பகல் நடைபெறவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

அதற்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த அனைத்து கட்சி கூட்டத்தில், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம், தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குதல் போன்றவை குறித்து அங்கு விவாதிக்கப்பட உள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இந்தியாவுக்கு விஜயம் செய்வதற்கு முன்னர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சி தலைவர்களும் முழுமையான அதிகாரப் பிரிவினைக்கு இணங்கினால் மட்டுமே அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியுமென தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அறிக்கை விடுவதற்கு முன் சுற்றறிக்கையை பார்க்கவும்

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தவினால் கையொப்பமிடப்பட்டு சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஊடகங்கள் ஊடாக அறிக்கைகளை வெளியிடுவது தொடர்பில் தற்போதுள்ள அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய சுகாதார அமைச்சின் செயலாளர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

மாகாண சுகாதார செயலாளர்கள், சுகாதார அமைச்சுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்களின் பிரதானிகள், அனைத்து மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் இது பொருந்தும்

திணைக்கள பிரதானியின் அனுமதியின்றி ஊடகங்களுக்கு தகவல்களை வெளியிடவோ அல்லது ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கவோ அரச அதிகாரிகளுக்கு சட்டப்பூர்வமான இயலுமை இல்லை என அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஊடகங்கள் மூலம் அறிக்கைகள், கருத்துகளை வெளியிடுதல் தொடர்பில் சுகாதார அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நிறுவன ரீதியாக குறித்த சுற்றறிக்கை தன்னிச்சையாக நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், அதற்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என இடைநிலை மருத்துவ ஊழியர்களின் ஒன்றிணைந்த அமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு தங்கள் தரப்பினர் தொடர்பான கருத்துகளை வெளியிடும் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கருத்து வெளியிடும் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென பல சந்தர்ப்பங்களில் நீதிமன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பில் கவனம் செலுத்தாது இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக ரவி குமுதேஷ் தெரிவித்தார்.சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதைத் தடுக்கும் வகையில் இந்த சுற்றறிக்கை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## இவ்விரண்டுக்கே ரணிலுக்கு ஆதரவு

இது தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு பொஜன பெரமுன ஆதரவு தெரிவிப்பதாக இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தம்பதெனிய தொகுதிக் குழு கூட்டத்தில் உரையாற்றிய போதே சட்டத்தரணி சாகர காரியவசம் இதனை தெரிவித்தார்.

## காஸ் விலையை சமப்படுத்த சூத்திரம்

இந்த நிலைமை குறித்து லாப்ஸ் கேஸ் நிறுவனத்துடன் கலந்துரையாடியதாகவும், விலை திருத்தம் தொடர்பான ஒப்பந்தத்தை அடுத்த வாரத்துக்குள் வழங்குவதற்கு அந்த நிறுவனம் உறுதியளித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, எதிர்காலத்தில் லாப்ஸ் காஸ் விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்

## வடக்கு பிரதேசத்தில் யானைக்கு கட்டுப்பாடு

உரிய பாதுகாப்பு நடைமுறைகள் ஏதும் பின்பற்றப்படாமல் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இவ்வாறு யானைகளை பயன்படுத்துவது சட்டவிரோதமானதாகும். அத்துடன் பொதுமக்களுக்கு எதிர்பாராதவிதமான ஆபத்துக்கள் ஏற்பட கூடும்.

அதனால் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி இவ்வாறு யானைகளை பயன்படுத்துவதற்கான அனுமதி வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் யானைகளை கையாள்வதற்கான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் அதற்கான ஆளணி ஆகியவை பேராதனை கால்நடை வைத்திய பீடத்தில் மட்டுமே உள்ளதுடன், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் தொழில் பரப்பினுள் அவற்றுக்கான ஏற்பாடுகள் ஏதும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறு உரிய அனுமதி பெறப்படாமலும், உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாது யானைகளை உற்சவங்களில் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு ஆலய நிர்வாகத்தினரும் மற்றும் உற்சவங்களை நடாத்துவோரை கேட்டுக்கொள்வதாக செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேங்காய் எண்ணெய்க்கு புதிய வரி விதிப்பு



உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டே, இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கு வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

## ஆட்சிப்பீடமேறும் சக்தி மொட்டுக்கே உண்டு

கடந்த காலங்களில் எங்களுடைய கட்சி கூட்டணியை அமைத்ததனால், எங்களது கட்சிக்கு அசாதாரணம் நிகழ்ந்த சந்தர்ப்பங்களும் சாதாரணம் கிடைத்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

தேர்தல் நடைபெறும் காலத்திலேயே கூட்டணி பற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெறும். என்றாலும்,ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆட்சிப்பீடமேறும் கட்சியாகும் என்றார்.

## இறாத்தல் பாணை பார்த்து வாங்கவும்

சுமார் 159 ஆண்டுகள் பழமையான பாண் கட்டளைச் சட்டம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு நடைமுறைக்கு வந்தது.

இந்த புதிய ஒழுங்குமுறையின் கீழ், அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம், நுகர்வோர் விவகார அதிகாரசபையுடன் இணைந்து, சரியான நிறையில் பாண் விற்கப்படுவதை உறுதிசெய்ய சோதனைகளை நடத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## இளநீர் விற்றவருக்கு ரூ.10,000தண்டம்

பொது மக்களிடமிருந்து கிடைத்த தகவலுக்கு அமைய கைது செய்யப்பட்ட நபர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவருக்கு கண்டி மேலதிக நீதவான் மொஹமட்ராபி, ரூபாய்10,000 தண்டம் விதித்தார்.

மஹியாவை பிரதேசத்தைச் சேர்ந்த மொஹமட் நலீம் என்பவருக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. அத்தொகையை செலுத்த தவறின், 6 மாதம் கடூழிய சிறைத்தண்டனை விதிப்பதற்கும் மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

# ஜனாதிபதியின் இந்திய விஜயம்




இந்திய பிரதமர் நரேந்திர மோடி




இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு


பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்


கலாநிதி எஸ்.ஜெய்சங்கர்


வர்த்தகர் கௌதம் அதானி

இந்தியாவுக்கு, இரண்டு நாள் (ஜூலை 21, 22) உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சனிக்கிழமை (22) மாலை நாடு திரும்பினார்.

இந்திய விஜயத்தின் போது, இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், இந்திய வர்த்தகர் கௌதம் அதானி ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜனாதிபதியுடன் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, அலிசப்ரி, காஞ்சன விஜசேகர மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோரும் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் பகிரங்க திருட்டு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பிரதேசங்களில் இராணுவத்தினரால் மீள கையளிக்கப்படவுள்ள பகுதிகளுக்குள் திருடர்கள் ஊடுருவி , பொருட்களை திருடி செல்வதாக காணி உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வலி. வடக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக கடந்த 33 வருடங்களுக்கு மேலாக உள்ள பிரதேசங்களில் சில பகுதிகளை இராணுவத்தினர் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கும் நோக்குடன், அந்த காணிகளில் இருந்து வெளியேறி வருகின்றனர்.



அவ்வாறு இராணுவத்தினர் வெளியேறி உள்ள போதிலும் அவை உயர் பாதுகாப்பு வலயமாகவே த ற்போதும் உள்ளது. குறித்த பகுதிகளை மாவட்ட செயலாளரிடம் உத்தி யோகபூர்வமாக கையளித்த பின்னரே காணி உரிமையாளர் காணிக்குள் பிரவேசிக்க முடியுமென இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் தமது காணிக்குள் வெளியாட்கள் சிலர் நடமாடுவது தொடர்பில் அறிந்து காணிக்கு சென்ற போது , உயர் பாதுகாப்பு வலய வேலிக்கு உள்ளே வாகனங்களுடன் நடமாடும் திருடர்கள் காணிக்குள் திருட்டுக்களில் ஈடு படுவதனை அவ தானித்துள்ளனர்.

அது தொடர்பில் இராணுவத்தினரிடம் முறையிட தாம் அஞ்சுவதாகவும் , உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வாகனங்களுடன் சென்று பொருட்களை களவாடுகிறார்கள் என்றால் , நிச்சயம் அவர்களுக்கு செல்வாக்கு இருக்கும். அது தொடர்பில் இராணுவத்தினரிடம் முறையிட சென்றால் தமக்கு ஆபத்து ஏற்படலாமென காணி உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



# தீ விபத்தில் தும்பு கருகியது

எஸ் தில்லைநாதன்

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்திராபுரம் பகுதியில் சனிக்கிழமை (22) திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக தும்பு தொழிற்சாலை ஒன்று முற்றும் முழுதாக எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த சம்பவத்தில் பல இலட்சம் பெறுமதியான இயந்திரங்களும், தும்பு மற்றும் உபகரணங்களும் எரிந்து நாசமாகியுள்ளதாக தும்புத் தொழிற்சாலை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இந்திய அரசின் வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகள் தேவை

யது பாஸ்கரன்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணித்து வழங்கப்பட்ட வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகளை நிர்மாணித்து வழங்க வேண்டிய தேவை இருப்பதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி றஞ்சனா நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

பாண்டியன்குளம் கிராம அலுவலர் பிரிவில் இந்திய அரசின் நிதி உதவித் திட்டத்தில் அமைக்கப்பட்டு கடந்த 2013ம் ஆண்டு காலப்ப குதியில் வழங்கப்பட்ட வீடுகளின் கூரைகள் சேதமடைந்தும் வீடுகள் உடைந்தும் சுவர்கள் வெடிப்புக்கு உள்ளாகியும் காணப்படுகின்றன.

குறித்த வீடுகளில் குடியிருக்க முடியாது ஆபத்தான நிலை காணப்படுவதாகவும் இந்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகளை பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மக்களினுடைய கோரிக்கைகள் தொடர்பாக பல்வேறு மட்டங்களில் நடைபெறுகின்ற.

# தொழிற்பயிற்சி வழிகாட்டல்

பேரின்பராஜா சபேஷ்

மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வு பிரதேச செயலாளர் சிவப்பிரியா



வில்வரத்னத்தின் ஆலோசனை, வழிகாட்டலில் களுதாவளை கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(23) நடைபெற்றது.

இதன்போது அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி, தனியார் தொழில் வழங்கல் ஆகிய முப்பதிற்கும் அதிகமான நிறுவனங்கள் கலந்துகொண்டதுடன், தமது சேவைகள் தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கு தெளிவுபடுத்தியதுடன் தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் குறித்த ஆலோசனைகளையும் வழங்கினர்.

# நூல்கள் அன்பளிப்பு

ஒலுமுதீன் கியாஸ் ஷாபி

நெனசர நூலக உதவி வேலைத் திட்டத்தின் கீழ், கிண்ணியா றஹ்மானியா நகர் பொது நூலகத்திற்கு பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான நூல்கள் சனிக்கிழமை (22) வழங்கி வைக்கப்பட்டன.

மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட, இந்த நூல்களை, கிண்ணியா பிதேச செயலக கலாசார அதிகார சபையினால், நூலகப் பொறுப்பாளர் ஏ.எம். முகம்மது நுஸைரிடம் கையளிக்கப்பட்டன.





# பெர்ணான்டோவுக்கு கெட்டபுலாவில் அஞ்சலி

ஆ.ரமேஸ்

இலங்கையின் முன்னணி தேயிலை உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான டில்மா நிறுவன நிறுவுனர் அமரர். மெரில் ஜே.பெர்ணான்டோவின் மறைவையொட்டி குயின்ஸ்பேரி கெட்டபுலா தோட்டத்தில் மக்கள் சனிக்கிழமை (22) அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது குயின்ஸ்பேரி,கெட்டபுலா, பார்கேபல்,இம்புல்பிட்டிய மற்றும் வெஸ்டோல் ஆகிய தோட்ட மக்கள் ஒன்றுகூடி அமரரின் உருவ படத்துக்கு மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

நீர்கொழும்பு பல்லன்சேன பிரதேசத்தில் 1930 ஆம் ஆண்டு பிறந்த மெரில் ஜே.பெர்ணன்டோ 1985 ஆம் ஆண்டு டில்மா நிறுவனரானார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வியாழக்கிழம (20) காலமானார் (வயது 93) காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.



# முகவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

எஸ். கே. குமார்

வெளிநாட்டுக்கு தொழிலுக்கு சென்று சித்திரவதைக்கு உட்பட்டு நாடு திருப்பிய பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்பிய முகவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ. பி. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அக்கரப்பத்தனை ஹென்போல்ட் மிளகுசேனை தோட்டத்தை சேர்ந்த திருமதி. சிவரஞ்சனி குடும்ப வறுமை காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடிச்சென்றிந்தார். அவர் தொழிலுக்கு சென்ற இடத்தில் கடுமையாக தாக்கப்பட்டும், அவரது உடம்பில் குண்டுசியால் குத்தப்பட்டும் மேலும் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து 25 நாட்களில் மீண்டும் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இப்பெண்ணுக்கு ஏற்பட்ட அநீதிக்கு, நீதி கிடைப்பதற்கான கோரிக்கையை அவரது குடும்பத்தினர் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் முன்வைத்துள்ளனர். அப்பெண்ணை இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பிய முகவர் யார் என்பதை அறிந்து சட்ட நடவடிக்கைகள் எடுக்க உள்ளதுடன், மலையகத்தில் செயற்படும் உப முகவர்கள், பெண்களை பாதுகாபற்ற முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்பி அல்லது விற்பனை செய்து பணம் வசூலித்து வருகின்றனர் என்றார்.

# ஆபிரிக்க பிரஜையின் நடைபயணம் நிறைவு

எஸ் தில்லைநாதன்

கொழும்பில் இருந்து நடைபயணத்தை ஆரம்பித்திருந்த ஆபிரிக்க நாட்டவர் ஒருவர் பருத்தித்துறையை வந்தடைந்துள்ளார்.

1000 கிலோ மீட்டர் தூரத்தை நடந்து முடிப்பது என்ற இலக்கை நோக்கி ஆபிரிக்க நாட்டவர் ஒருவர் கொழும்பில் இருந்து தனது நடை பயணத்தை அண்மையில் ஆரம்பதித்திருந்தார்.

அவர், பருத்தித்துறையை வெள்ளிக்கிழமை (21) வந்தடைந்துள்ளார்.

# பொலிஸ் வேடமிட்டு திருடிய 10 பேர் கைது

பொலிஸ் அதிகாரிகளைப் போல் செயற்பட்டு பல்வேறு பகுதிகளில் பணம், சொத்துகளைக் கொள்ளையிட்டமை தொடர்பில் 10 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மில்லனிய, கஹதுடுவ, அங்குருவாதொட்ட, பாதுக்க, கொஸ்கம, இங்கிரிய, கிரிந்திவெல, பண்டாரகம பகுதிகளில் பணமும் சொத்துகளும் கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனங்கள் சிலவற்றை வாளால் சேதப்படுத்திய சம்பவத்துடனும் இவர்கள் தொடர்புபட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.





இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஹொரணை - பொக்குணுவிட்ட சந்தியில் வைத்து கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை ஹொரணை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, ஏனைய 9 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 20 வயதுக்கும் 48 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர்களால், கொள்ளையிடப்பட்ட இரண்டு முச்சக்கர வண்டிகள், 6 மோட்டார் சைக்கிள்கள், வெவ்வேறு எடை கொண்ட 3 தங்கக் கட்டிகள், பொலிஸ் என குறிப்பிடப்பட்ட T-shirts மற்றும் Jacket என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஒருவரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை செய்யவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஏனைய சந்தேகநபர்கள் எதிர்வரும் 03 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆளுநர்களுக்கு இடையில் சந்திப்பு

எப்.முபாரக்

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி ஹிஸ்புல்லாஹ் மற்றும் தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர்களுக்கு இடையிலான சந்திப்பு திருகோணமலை ஆளுநர் காரியாலத்தில் சனிக்கிழமை (22) இடம் பெற்றது.

இந்த சந்திப்பில் கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் கிழக்கு மாகாண ஏனைய அபிவிருத்தி தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.



# உலகுக்கு இலங்கைத் தேயிலையை கொண்டு சென்ற குரல் ஓய்ந்தது

இலங்கை ஏற்றுமதியில் கொடிக்கட்டி பறந்த தேயிலையின் தற்போதையை நிலைமையை பார்க்குமிடத்து, இன்னும் சில காலங்களுக்கு முற்றாக அழிந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், தரமான போட்டித் தேயிலை தூள்கள் உலக சந்தையில் இடம் பிடித்துக்கொள்வதற்கு போட்டிப்போட்டுக்கு கொண்டிருக்கின்றன.

இலங்கைத் தேயிலையின் மகிமையை உலகுக்கு கொண்டு செல்வதில் மெரில் ஜே பெர்னாண்டோ முக்கிய பங்காற்றியிருந்தார்.

இலங்கைத் தேயிலை ஐக்கிய இராஜ்ஜியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு மொத்தமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த நிலையில், முதன் முறையாக அதில் மாற்றத்தை ஏற்படுத்தி, 1980 ஆம் ஆண்டுகளில் டில்மா எனும் வர்த்தக நாமத்தில், இலங்கை தேயிலை அடையாளத்தைக் கொண்டு வெளிநாடுகளின் சில்லறை சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையை இவர் ஆரம்பித்திருந்தார். சில்லறை சந்தைகளை பிடிப்பதில் கடுமையான கரிசணையை அவர் கொண்டிருந்தார்.

வெளிநாடுகளில் மாத்திரமன்றி, உள்நாட்டிலும் உயர் தரம் வாய்ந்த தேநீரை அருந்துவதற்கான வாய்ப்பை இவர் ஏற்படுத்தியிருந்தார். சந்தையில் டில்மா நாமத்தில் உயர் தரம் வாய்ந்த தேயிலை முதன் முதலில் இவரின் வழிகாட்டலில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

உலகறிந்த இலங்கை தேயிலையின் உயர் சுவையை இலங்கையிலுள்ளவர்கள் அனுபவிக்க முடியாத நிலையை மாற்றும் வகையில், இவரினால் இந்த தயாரிப்புகள் உள்நாட்டு சந்தையிலும் அறிமுகம் செய்யப்பட்டன.

இலங்கையில் தேயிலையை முதன் முதலில் பயிரிட்டு அறிமுகம் செய்தவர் ஜேம்ஸ் டெய்லர் என்பது வரலாறு. அதனைத் தொடர்ந்து, இலங்கையின் மலையகத்தின் அடையாளம் உலகறியச் செய்யப்பட்டது.

அந்த சாதனையை அடுத்த நிலைக்கு கொண்டு சென்றவர் மெரில் ஜே பெர்னாண்டோ. தூய இலங்கை தேயிலை எனும் அடையாளத்தை பேணுவதற்கு இவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. இலங்கைத் தேயிலையை மாத்திரமன்றி, அந்த தேயிலை தயாரிப்புக்கு முக்கிய பங்காற்றும் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களின் நலனிலும் இவர் அக்கறை கொண்டிருந்தார்.

தேயிலை மீது கொண்டிருந்த அக்கறையினூடாக, வாடிக்கையாளர்கள், பணியாளர்கள், பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் சூழலுக்கு பயன் கிடைக்க வேண்டும் என்பதாக அமைந்திருந்ததுடன், டில்மா வியாபாரம் ஒரு மனித நேய சேவையாகவும் அமைந்திருந்தது.

2002 ஆம் ஆண்டில் இவரின் நிறுவனத்தினால் நலன்புரி மையமொன்று ஸ்தாபிக்கப்பட்டு, அதனூடாக வருடாந்தம் நிறுவனம் பெறும் வரிக்கு முந்திய இலாபத்தில் 10 சதவீதத்தை இலங்கையின் பின்தங்கிய சமூகத்தின் மேம்பாட்டுக்கு செலவிட்டிருந்தார். இந்தத் தொகை 2020 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டிருந்தது.

தமது வாழ்நாளில் 73 வருட காலத்தை இலங்கை தேயிலையின் வளர்ச்சிக்காக இவர் அர்ப்பணித்திருந்தார். இவரின் மறைவு, இலங்கை தேயிலை வரலாற்றில் ஈடு செய்யப்பட முடியாத ஓர் இழப்பாக அமைந்திருப்பதுடன், வியாபாரத்தில் மாத்திரமன்றி, சமூகத்திலும் அக்கறை கொண்ட பெருந்தோட்டத் துறையுடன் தொடர்புடைய இவரைப் போன்றவர்களை காண்பது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அரிதாகவே உள்ளது. மறைந்தும் இலங்கைத் தேயிலையின் அடையாளமாக இவர் என்றும் நிலைத்திருப்பார்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

போருக்குப் போகும் மாவீரர்கள் போல, எதையும் சிந்திக்காமல் சூடான வார்த்தைகளைத் தமக்குப் பிடிக்காதவர்களிடம் அள்ளிவீசுவதுண்டு.

கோபம் ஒருவரை எல்லை மீறும் உணர்வுக்குள் வசப்படுத்திவிடுகின்றது. சினம் ஏற்படுவது இயல்பானது. அதற்காகத் தன்னை மறந்து, தகாத வார்த்தைகளைப் பேசும்போது, அதைக் கேட்ட நபரும் அம்பு போல் பாய்கின்றார்.

ஒரு கணம் அமைதியாகச் சந்தித்தால், சினம் அடங்கிவிடும். மனிதனை மனிதன் வெறுத்தல் தகாது. பிடிக்காதவரிடம் பேசாமல் ஒதுங்குவது நல்லது.

நியாயத்தை எவரும் நிராகரிக்கும் போது, இயல்பான கோபம் வருவதுண்டு. இதற்காகக் கெட்டவர்கள் எல்லோரிடமும் மோத முடியாது.

தவறான நடத்தை உள்ளவர்கள், அதன் பிரதிபலனை பெற்றே தீருவார்கள். குரோதம் ஒருபோதும் சந்தோசங்களை உணராது.; அறிவைக் கெடுக்கும். பிறரின் தூற்றுதலுக்கு ஆளாவார்கள்.

வாழும் காலம் பொன்னானது. எனவே, நல்ல வழியில் வாழ்ந்தால், அதுவே நிரந்தர நிம்மதியை அளிக்கும். சினம், நற்குணம் அறியாது.

பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 10:

# அதிகாரப் பகிர்வும், தெற்கு இளைஞர்களும், அரசியல் பூச்சாண்டிகளும்



என். கே. அஷோக்பரன்

தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வு கேட்டு தெற்கு இளைஞர்களை மீண்டும் எழுப்ப முயற்சிக்க வேண்டாம் என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உரையாற்றியிருக்கிறார்.

“தமிழ் அரசியல்வாதிகளுடன் அதிகார பகிர்வு தொடர்பில் நான்கு சுற்று பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இந்த பேச்சுவார்த்தைகளில் அமர்ந்த தமிழ்த் தேசியவாதிகள் வெளியில் சென்று இது அவசியமில்லை. அதிகாரபகிர்வு இன்றி இதனை முடிக்கப் போவதில்லை என்று கூறுகின்றனர். கனவு காண வேண்டாம் என்று நான் அவர்களிடம் கேட்கின்றேன்.

அதிகார பகிர்வுகோரி வட்டுக்கோட்டை வரை சென்று மீண்டும் 2009 வரை இந்நாட்டு இளைஞர்களை இரத்த களரிக்குள் கொண்டு சென்றனர். மீண்டும் யுத்தத்தையா கேட்கின்றீர்கள்? அன்றைய கூட்டத்தில் சம்பந்தன் இருந்தார். அவர் யாழ்ப்பாணத்தில் சிங்கக்கொடியை அசைத்து பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வுக்குள் போவோம் என்று அன்று உறுதியளித்தார். அப்படியென்றால் எப்படி இன்று வந்து பேச்சுவார்த்தை நடக்கும் போது ஒழுக்கத்தை மீறி வெளியில் சென்று அதிகாரபகிர்வை தவிர நாங்கள் எதனையும் ஏற்கமாட்டோம் என்கின்றனர். அதனால் அவர்களுக்கு ஒன்றை கூறிக்கொள்கின்றேன். இந்த நாட்டை ஒருபோதும் பிரிக்க முடியாது. பிரிவினை வாதத்திற்கு நாடு முகம்கொடுக்காது. மீண்டும் யுத்தத்திற்குள் தள்ள வேண்டாம். உறங்கிக்கொண்டிருக்கும் தெற்கு இளைஞர்களை மீண்டும் எழுப்ப முயற்சிக்க வேண்டாம். எங்களுக்கு சர்வதேசத்தை மகிழ்விக்கவும், அமெரிக்க, இந்திய தூதுவர்களை மகிழ்விக்கவும் முடியும். ஆனால் அதுவல்ல நடக்க வேண்டியது. அனைத்து இனங்களில் உரிமைகளுக்காகவும் பொதுவில் ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்வோம். பயணத்தை ஆரம்பிக்க முன்னரே பிரிவினை வாதம், அதிகார பகிர்வு தொடர்பில் கூறினால் அதற்கு எங்களால் இடமளிக்க முடியாது. வடக்கு மக்கள் இதற்கு இடமளிக்கப் போவதில்லை. அடுத்த தேர்தலில் தோல்வியடையும் தமிழ் தேசிய வாதிகள் முன்னெடுக்கும் இந்த செயற்பாடுகளுக்கு நாங்கள் எதிர்ப்பு என்றார்.”

இந்தப் பேச்சைப் பேசியவர் ஒரு பேரினவாத அரசியல்வாதி என்று தோன்றலாம். ஆனால் இதனைப் பேசியவர் சுரேன் ராகவன் என்ற தன்னை தமிழ் மக்களின் பிரதிநிதியாகப் பாவித்துக்கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர். லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவிற்குப் பிறகு, அந்த இடத்திற்கான போட்டி நிறையவே இருக்கிறது. கற்றறிந்த, தொழில் நிபுணத்துவமுள்ள, உலகளவில் நல்ல செல்வாக்குள்ள, தமிழர்களின் பிரிவினைக்கோரிக்கைகளுக்கு எதிரான பெயரளவுத் தமிழன் என்பதுதான் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவின் பின் வெற்றிடமாகியிருக்கும் இடம். இது அரசாங்கங்களுக்கு மிகவும் அவசியமானதொரு விஷயம். அரசாங்கத்தோடு ஒட்டியிருக்கும் வடக்கு-கிழக்குத் தமிழ் அரசியல்வாதிகள் என்று பார்த்தால் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் போன்றவர்களேயுள்ளனர். இவர்களால் கதிர்காமரின் இடத்தை நிரப்ப முடியாது. இந்த சூழலில்தான், 2015ல் மைத்ரிபால சிரிசேன ஜனாதிபதியாக இருந்தபோது, “ஒக்ஸ்ஃபேர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து” கலாநிதி. சுரேன் ராகவன் என்று ஒருவரை வட மாகாண ஆளுனராக ஜனாதிபதி மைத்ரிபால சிரிசேன நியமிக்கிறார். அதற்கு முன்னர் இலங்கை அரசியலில் கேள்விப்பட்டிராக பெயர். யார் இந்த சுரேன் ராகவன் என்று தேடினால், தனது 40 வயதுக்கு மேல் அரசியல் கற்கையை இங்கிலாந்தின் கென்ட் பல்கலைக்கழகத்தில் தொடங்கியவர். தொடர்ந்து கென்ட் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதி பட்டத்திற்காக இலங்கை பௌத்த பிக்குகளின் சமஷ்டி எதிர்ப்பை ஆராய்ந்து சமஷ்டி என்ற மேற்குலக திணிப்பு இலங்கைக்கு பொருந்தாது என்ற முடிவை தனது ஆராய்ச்சியின் முடிவுகளுள் ஒன்றாகத் தந்தவர். அதுமட்டுமல்ல, சிங்களம் சமூகமும், பௌத்தமும் இரண்டற்றவை என்ற முடிவுக்கும் வந்தவர். கென்ட் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிபட்டப்படிப்பிற்குப் பின், பௌத்த கற்கைகளுக்கான ஒக்ஸ்ஃபேர்ட் நிலையத்தில் ஆய்வாளராகப் பணியாற்றியவர். இவருக்கும் ஒக்ஸ்ஃபேர்ட் பல்கலைக்கழகத்திற்குமுள்ள தொடர்பு இதுதான். நன்றாகச் சிங்களம் பேசுவார் என்பதுதான் சுரேன் ராகவன் தன்னை இலங்கை அரசியலில் சந்தைப் படுத்திக்கொள்ள முக்கிய காரணமானது. சிங்களம் பேச மட்டுமல்ல, நன்றாக எழுதவும் இவரால் முடியும். தமிழை விட சிங்களம் நன்றாகவே எழுதுவார், பேசுவார். தமிழர் வரலாற்றைவிட, இவருக்கு சிங்கள-பௌத்த வரலாறும் பாரம்பரியங்களும் நன்றாகவே தெரியும். தனிப்பட்ட தொடர்புகளினால், ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்ட சுரேன் ராகவன், வட மாகாண ஆளுநராக நியமிக்கப்படுகிறார். கோட்டாபய ஜனாதிபதியானதும், அனைத்து ஆளுநர்களும் பதவி விலகச் சொல்லப்பட்டதுடன், சுரேன் ராகவனும் பதவி விலகுகிறார். அதன் பின்னர், அடுத்த பாராளுமன்றத் தேர்தலில், ராஜபக்ஷக்களின் ஆதரவாளராகவும் மாறி,

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியில் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகினார். ரணில் விக்ரமசிங்ஹ ஜனாதிபதியானதும், ரணில் ஆதரவாளராக மாறி, இராஜாங்க அமைச்சுப் பதவியும் பெற்றுக்கொண்டு, இன்று ரணில் ஆதரவாளராக இருக்கிறார். எப்படியாவது கதிர்காமரின் இடத்தைப் பிடித்துவிட வேண்டும் என்ற அவாவில் யார் ஆட்சியதிகாரத்திற்கு வந்தாலும், அவருக்குத் தூபமிட்டு, வால்பிடித்து பதவிகளைத் தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கும் இத்தகைய தன்மைகளால் கதிர்காமராக ஆக முடியாது என்ற உண்மை அவருக்குத் தெரியவில்லை. பாவம், ஆசை யாரை விட்டது? நிற்க.

இந்த சுரேன் ராகவன் “அதிகார பகிர்வு தொடர்பில் கூறினால் அதற்கு எங்களால் இடமளிக்க முடியாது. வடக்கு மக்கள் இதற்கு இடமளிக்கப் போவதில்லை” என்று பேசியதுதான் பெரும் நகை முரண். வடக்கு-கிழக்கு மக்களால் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சொல்வது அந்த மக்களின் கருத்து இல்லையாம், ஆனால் ராஜபக்ஷக்களின் கட்சியினால் நியமன உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட இவர் சொல்வது தமிழ் மக்களின் கருத்தாம்! வடக்கு மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பது ஒரு புறமிருக்க, வடக்கு மக்களின் விருப்பு பற்றி கருத்துரைக்க சுரேன் ராகவனுக்கு எந்த தார்மீக உரிமையும் கிடையாது என்பதுதான் உண்மை. இலங்கை அரசில் சுரேன் ராகவன் வகித்த, வகிக்கின்ற வட மாகாண ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர் என்ற பதவிகளெல்லாம் அவர் மக்கள் வாக்கில், மக்கள் விருப்பில் பெற்றுக்கொண்ட பதவிகள் அல்ல. வட மாகாண ஆளுநர் என்பது மைத்திரிபால சிரிசேன வழங்கியது. பாராளுமன்ற உறுப்பினர் என்பது ராஜபக்ஷக்கள் வழங்கியது. இராஜாங்க அமைச்சர் என்பது ரணில் விக்ரமசிங்ஹ வழங்கியது. அந்தப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய கடமையை சரிவரச் செய்துவிட்டு தன் கடன் பணிசெய்து கிடப்பதே என்று இருந்தால் பிழையில்லை. அதைவிட்டு விட்டு மக்களாணை, மக்கள் விருப்பு பற்றியெல்லாம் பேச தனக்கு எதுவித அருகதையுமில்லை என்பதை அவர் விரைவில் புரிந்துகொள்வது அவருக்கு நல்லது.

அடுத்ததாக தெற்கு இளைஞர்களை எழுப்ப வேண்டாம் என்ற பூச்சாண்டி அரசியலைக் கையிலெடுப்பது தன்னை படித்தவராக முன்னிறுத்தும் சுரேன் ராகவனுக்கு அழகல்ல. தமிழ் மக்களிடம் இந்த பூச்சாண்டி அரசியல் வேலைசெய்யாது என்று பெருந்தேசியவாதிகளான ராஜபக்ஷக்களுக்கே நன்றாகத் தெரியும். வட மாகாண ஆளுநராக இருந்து இதையேனும் புரிந்துகொள்ளாமல் போனது, வட மாகாண தமிழ் மக்களின் நாடித்துடிப்பைப் புரிந்துகொள்ள முடியாத நிலைமையைத் தான் கோடிகாட்டிநிற்கிறது.

சுரேனின் இந்த பயனற்ற பேச்சு, இன்னொரு பூதத்தை கஜேந்திரகுமாரின் மூலம் தோற்றுவித்திருக்கிறது. அதிகாரப் பகிர்வு தொடர்பில் வட மாகாண மக்களின் விருப்பு என்னவென்று தெரியவிரும்பினால் நீங்கள் வட மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்திப்பாருங்கள் என்று பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பதிலடிச் சவாலொன்றை விடுத்திருக்கிறார். ஸ்கொட்லாந்து தேசியவாதிகளைப்போல, சுரேன் ராகவன் சொல்லும் ஜனநாயக வழியில், அதிகாரப்பகிர்வு தொடர்பில் (தனிநாடு தொடர்பில் அல்ல) தமிழ் மக்களின் விருப்பை அறிந்துகொள்ள வடக்கு-கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியவாதிகள் பலமாக முன்வைக்கத் தொடங்கினால், தெற்கின் ஜனநாயகவாதிகள் என்ன செய்யப் போகிறார்கள்? சுரேன் ராகவன் அதற்கு என்ன சொல்லப் போகிறார்? சர்வசன வாக்கெடுப்பு மூலம் தமது விருப்பை வெளிப்படுத்தும் உரிமை தமிழ் மக்களுக்கு இல்லையென்றா?

கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதைதான் இது. இந்த லட்சணத்தில் அடுத்த கதிர்காமராகும் ஆசை வேறு. யாரோடு நோக, யாருக்கெடுத்துரைக்க.

## கடிதங்கள்

### அலைய விடாதீர்கள்



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடரும் வறட்சி காரணமாக பல்வேறு இடங்களிலும் குடிநீர் நெருக்கடி காணப்படுவதுடன் கால்நடைகளும் குடிநீருக்கு அலையும் நிலை காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலப்பெருமாள் குளம், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், கோட்டைகட்டி, துணுக்காய் மற்றும் ஆலங்குளம் ஆகிய பகுதிகளில் நிலவும் வறட்சி காரணமாக குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றன.

அதேபோல், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளிலும் வறட்சி காரணமாக அதிகளவான பாதிப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக அன்றாடத் தேவைக்காக குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர் கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். பூநகரி பிரதேசத்தின் பல இடங்களில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் குறித்த பகுதிகளில் தொடர்ந்தும் வறட்சி நிலை காரணமாக குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்மு

ழங்காவில், ஜேம்ஸ்புரம் மற்றும் அன்புபுரம் ஆகிய பகுதிகளிலும் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசத்திற்கு உட்பட்ட அக்கராயன், கோனாவில் போன்ற பகுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றன பூனகரி பகுதியில் உள்ள நீர்நிலைகள் வற்றி காணப்படுவதனால் கால்நடைகளும் குடிநீர் தேடி அலைகின்றன.

யது பாஸ்கரன்



சயனிகா ஸ்ரீகாந்த்
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்

# வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்

பல நூறு ஆண்டு காலமாக சில மத வணக்கங்கள், வழக்கங்கள் தமிழர்கள் வாழ்வில் புராணங்களுடன் கலந்து இயன்ற அளவும் பொதுவாக பின்பற்றப்பட்டு வருகிறது. அதனை மூடநம்பிக்கை என்று சிலரும் பலம் வழக்கங்கள் என்று சிலரும், மரபுகள் என்று சிலரும் கூறுவர். இவை அன்றைய சூழலில் மற்றவர்கள் மனதில் ஒரு பயத்தை உண்டாக்குவதற்கான ஒரு மாற்று வழியாக இருந்தும் இருக்கலாம். இப்படியான பழம் வழக்கங்கள் இன்னும் தேவையா என பலர் கேள்வி கேட்கலாம்.

இன்றைய நவீன அறிவியல் நடைமுறையில் இவைகளின் பங்கு எப்படி இருக்கும் என்பதை நாம் கட்டாயம் அறிய வேண்டும். அப்பொழுதுதான் அதற்கு எவ்வாறு நாம் பழக்க வழக்கங்களையும் அல்லது அதை ஒட்டிய மரபுகளையும் சரிப்படுத்தி அடுத்த தலைமுறைக்கும் நமக்கும் பெருமை சேர்க்குமாறு கொண்டு செல்ல முடியும். இது எவ்வாறாயினும் பொதுவாக தமிழர்களின் பல சடங்குகள் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளுக்கும் பின்னால் அறிவியல் சார்ந்த அல்லது ஏதாவது பொது காரணங்கள் இருப்பதை காண்கிறோம்..

இப்போது சில விஞ்ஞான மரபுகளின் பின்புலத்தில் இருக்கும் அருமையான காரணங்களை பார்ப்போம் நம்முடைய வாழ்வியலில் யாரைப் பார்த்தாலும் நமஸ்காரம் என்று இரண்டு கைகளையும் கூப்பி வணக்கம் கூறுகிறோம். அதன் மூலமாக விரல்களின் நுனி பிரஷர் புள்ளியின் ஊடாக தூண்டப்பட ஆரம்பிக்கும் அதனால் நாம் சந்திக்கும் நபரை நீண்ட நாட்கள் நினைவில் வைத்திருக்க இது பெரிதும் உதவும்.

அரச மர வழிபாட்டு முறை பெரும்பாலும் அரசமரம் கோவில்களிலும் ஆற்றங்கரைகளிலும் உள்ளன அரசமரம் மூலமாக எந்த ஒரு கனி காய் பூ என்பன கிடைக்காது. ஆனாலும் நம் முன்னோர்கள் இதனை அழிவடையாமல் இதன் அழிவை தடுக்க பாதுகாத்து வந்தனர் அம் மரத்தின் அடியில் தெய்வ உருவங்களை அமைத்தும் தெய்வங்களை வணங்கும் போது அரச மரத மரத்தினையும் வளம் வருகிறார்கள். காரணம் அரச மரத்தின் தாமிரச்சத்தும் மின்சார சக்தியும் காற்றின் மூலமாகவும் இலையின் கூர்முனை வழியாகவும் வளம் வருவோர் உடலில் பாய்கின்றன பெண்களின் கர்ப்பத்திற்கு தடையாக இருக்கும் கிருமிகளை அழிக்கின்றது மற்றும் இரவில் அதிகமான ஒட்சிசன் வாயுவை உற்பத்தி செய்கின்றது இதனால் இம்மரத்தின் அழிவை தடுக்க நம் முன்னோர்கள் வழிபாட்டு முறைகள் கொண்டு வந்துள்ளனர்.

கோயிலில் கோயில் மணியை வைத்து அதனை அடிக்கும் பழக்கத்தை கொண்டு வந்தனர் என்றால் நாம் நம்முடைய கஷ்டங்கள் தீர வேண்டும் என்பதற்காக ஆலயங்களுக்கு செல்வோம் அப்போது நம்முடைய மனம் அமைதி இல்லாமல் அலைபாய்ந்து கொண்டிருக்கும் கோயில் மணிகள் பல வகையான உலோக கலவைகளால் செய்யப்பட்டது. மணி அடிப்பதனால் ஏற்படும் ஒலியானது மனிதனின் உடைய வலது இடது மூளைகளை இணைத்து ஓர் அமைதியான மனநிலையை அடைய வைக்கின்றது

பல இந்துக்களின் வீட்டில் கிரகணத்தின் போது வீட்டை சுற்றி வெளியே செல்ல அனுமதிப்பதில்லை அந்த நேரத்தில் கிரகணத்தை நேரடியாக பார்க்கவும் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். குறிப்பாக இந்நேரத்தில் கர்ப்பிணிப் பெண்கள் வீட்டிற்குள்தான் இருக்க வேண்டும் அப்போதுதான் அவர்கள் வயிற்றில் உள்ள குழந்தை எந்தவித குறைபாடும் இல்லாமல் பிறக்கும் .

அதேபோல் கிரகணத்தின் போது உணவருந்தவோ, சமைக்கவோ கூடாது எனவும் நம்பப்படுகின்றது. சில வீடுகளில் ஒவ்வொரு உணவு பண்டத்தின் மீதும் துளசி இலை போடுவார்கள். இதனால் இந்த உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. இதில் உள்ள ஒரு பிரச்சனை என்னவென்றால் கிரகணத்தை நேரடியாக உங்கள் கண்களால் பார்த்தால் சூரிய ஒளியின் தீவிரத்தால் உங்கள் விழித்திரை வெகுவாக பாதிக்கப்படும். ஒளி உணர் அணுக்களுக்கும் கம்பிகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதனால் சில நேரங்களில் விழித்திரை எரிச்சல் கூட உண்டாகலாம் மேலும் கிரகணத்தின் போது நுண்ணுயிர்கள் முனைப்புடன் செயல்பட்டு உணவுகளை பழுதடையச் செய்யும். அதனால் உணவுகளின் துளசி இலையை போடும்போது அதில் உள்ள மருத்துவ குணங்களால் உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும்.

மற்றும் சூரிய வழிபாடு இந்துக்களின் வாழ்வியலில் மிக முக்கியமான கடமையாக காணப்படுகின்றது. இவர்கள் அதிகாலைகளில் சூரிய பகவானை வழிபடும் வழக்கத்தை கொண்டிருக்கின்றனர் அதிகாலையில் வெளிப்படும் சூரிய கதிர்கள் கண்களுக்கும் உடலுக்கும் மிகவும் நல்லது அதிகாலையில் சுத்தமான காற்று கிடைக்கும் குறிப்பாக மார்கழி, தை மாதத்தில் நல்ல தரமான பிராணவாயு கிடைக்கும் இது பூமியினுடைய சுழற்சியினால் ஏற்படும் ஒரு வகையான செயல் இதனை மக்கள் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மார்கழி மாதத்தில் கோலம் போட வைத்தார்கள் இது வாழ்வியலின் தமிழ் அறிவியலின் செல்வாக்கை காட்டுவதாக அமைகின்றது

ஒவ்வொரு பெண்களும் திருமணத்தின் பின் குங்கும பொட்டு அணிவது வாடிக்கையான ஒன்றாகும் நெற்றியில் தான் அண்டினியர் சக்கரம் இருப்பதாக கூறப்படுகின்றது அதாவது ஆறாவது சக்கரம் அதனால் நெற்றியில் பொட்டு வைக்கும் போது இந்த சக்கரம் தானாக செயல்பட தொடங்கி விடும் அதன் பின் உடலில் உள்ள ஆற்றல் திறனை இழக்க விடாமல் செய்து புத்தி கூர்மையை ஏற்படுத்துகின்றது அதோடு ரத்த ஓட்டத்தை சீர்படுத்துகிறது.

திருமணமான பெண்களின் காலின் உடைய பெருவிரல் அருகே உள்ளவிரலில் மெட்டி அணிவது வழக்கமாக இருக்கின்றது. அந்த விரலில் இருக்கக்கூடிய நரம்பு கர்ப்பப்பை மற்றும் இதயத்தோடு தொடர்புடையதாக இருப்பதால் அந்த விரலில் மெட்டி அணிவதால் கர்ப்பப்பை வலுவடையும் இதனால் திருமணத்திற்கு பிறகு மெட்டி அணிய சொல்கின்றனர். இதனால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

இறந்த வீடுகளுக்கு சென்றால் குளித்தல். பிரேத ஆன்மாக்கள் உங்களைப் பிடித்து விடும் என்ற மூடநம்பிக்கையைத்தான் இதற்கு காரணமாக பலரும் கூறி வருகின்றனர். ஆனால், உண்மை என்னவென்றால் அது நுண்ணுயிர்கள் சம்பந்தப்பட்டவை ஆகும். ஒருவர் இறந்த பிறகு அவர் உடல் கொஞ்சம் கொஞ்சமாக அழுகத் தொடங்கும் ஈமச்சடங்குகளில் கலந்து கொள்பவர்கள் இறந்த நபருக்கு அருகில்தான் இருக்க வேண்டிவரும் இதனால் அழுகிக் கொண்டிருக்கும் இறந்த உடலில் இருந்து வரும் பக்டீரியாக்களால் நீங்கள் பாதிக்கப்படலாம். அதனால்தான் ஈமச்சடங்கு முடித்த கையோடு பிற வேலைகளை செய்வதற்கு முன் குளிக்க வேண்டும்.

வடக்கு நோக்கி தலை வைத்து படுக்காதீர்கள் என்று நாம் எமது அன்றாட வாழ்வியலில் கேள்விப்பட்டு அதற்கு ஏற்ப நடந்திருப்போம் இதற்கான அறிவியல் உண்மை என்னவென்றால் வடக்கு திசையில் தலை வைத்து படுக்கும் போது அது வட துருவம் என்ற காரணத்தினால் உங்கள் தலை ஒரு காந்தமாக செயல்படும் தூங்கும் போது வடதிசை நோக்கி தலை இருந்தால் உடலின் வடதுருவம் பூமியின் வடதுருவம் ஒன்றோடு ஒன்று தள்ளும் இதனால் உங்கள் ரத்த ஓட்டம் பாதிக்கப்படும் இதன் காரணமாகத்தான் நாம் நம்முடைய வாழ்வியலில் வடக்கு திசை நோக்கி படுப்பது நம்முடைய வாழ்வில் பெரும்பாலும் மிக குறைவாக உள்ளது.

பயணத்துக்குமுன் தயிரும் சர்க்கரையும் உண்ணுவது வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன் தயிரும் தேனும் கொடுப்பது ஒரு வழக்கமாக உள்ளது இது அதிர்ஷ்டமானது என நம்பப்படுகிறது. தயிரில் கல்சியம் மற்றும் புரதம் உள்ளது கூடவே இயற்கை சர்க்கரையும் சிறிதளவில் உள்ளது இதனால் வயிற்றுக்கும் செரிமான அமைப்பிற்கும் நல்லதாகும் அதனால் வெளியே செல்ல முன் இதனை உண்ணச் சொல்கிறார்கள் இதில் குளிர்ச்சி தன்மையும் உள்ளது. அதனால் அழுத்தம் நிறைந்த வேலைகளை செய்ய கிளம்புவதற்கு முன் இதனை உண்ண வைக்கின்றார்கள் பாம்பை கொன்ற பிறகு அதன் தலையை நசுக்குவது பாம்பை கொல்லமுயற்சி செய்பவரை பாம்பு அதன் கண்களால் படிந்து வைத்துக் கொள்ளும் எனக் கூறுவார்கள் அதனால் அதன் தலையை நசுக்கி கொல்வார்கள். ஆனால், அதற்கு சொல்லப்படும் காரணம் தவறானது பாம்பை கொன்ற பிறகும் கூட அதன் பல்லில் விஷம் இருக்கும் இதனால் அது இறந்தாலும் ஆபத்தானது அதனால் பாம்பின் தலையை நசுக்கினால் அந்த விஷம் அழிந்து விடும் துண்டிக்கப்பட்ட பாம்பின் தலையை எதிர் செயலாற்றி கடிக்கசெய்யலாம்.

இவ்வாறு பல பல விடயங்கள் கருத்துடன் வகுக்கப்பட்ட பின் அதன் உள்ளார்ந்த அர்த்தம் தெரியாமல் போய்விடுகின்றது அறிவு மற்றும் தகவலின் அளவு நம் சிந்தனையை கட்டுப்படுத்துகின்றது. மேலும் பல வியக்கத்தக்க விடயங்கள் தமிழர் பண்பாட்டில் காணப்படுகின்றன. கிராமத்து திருவிழாக்களில் மஞ்சள் நீராட்டுதல் ஓர் அர்த்தத்தோடு வந்ததுதான் மஞ்சள் ஒரு சிறந்த கிருமி நாசினி வீட்டுத் தோட்டத்தில் நிற்கும் முருங்கைக்கீரை ஆண்மையைப் பெருக்கும் கீழாநெல்லி மஞ்சள் காமாலை நோய்க்கு அருமருந்தாகும் அந்த மருந்து ஆங்கில மருந்து விட பலனை அள்ளித்தர வல்லது. அதன் சக்தி உணர்ந்த மேல்நாட்டு விஞ்ஞானிகள் கீழாநெல்லியை மாத்திரையில் கொண்டு வந்தனர். இது தமிழர் மருத்துவத்திற்கு கிடைத்த அங்கீகாரம் மற்றும் மேலும் பல தமிழர்கள் வழக்காறுகளுக்கு பின்னால் இருக்கும் அறிவியல் பற்றி நாம் அறிவது குறைவு திருமணமான பெண்கள் தலைக்கு பூச்சி விடுவது யானையை பார்ப்பது அல்லது கழுதை கத்துவது நல்லது.

எண்ணைமஞ்சள் குங்குமம் கொட்டுவது தீயது செவ்வாய் அல்லது மாலை நேரங்களில் முடி வெட்டுவது கெட்டது, பல்லி தலையில் விழுவது ராகு காலத்தின் போது காரியங்களை செய்வது அல்லது ஓர் அமங்கலமான நேரத்தில் பயணம் செய்வது இடது கையால் கொடுப்பது அல்லது எடுப்பது உடைந்த பூசணிக்காயை அல்லது தேங்காய்களை சாலையில் தாண்டி செல்வது கெட்டது என பல விடயங்கள் நமது முன்னோர்கள் கூறி கேட்டிருப்போம் ஆனால் அதற்கு பின்னிருக்கும் அறிவியலை நாம் அறிய தவறிவிட்டோம்

விஞ்ஞானத்தின் அணு சக்தியும் தமிழரின் அறிவியலும் ஒரே பரம்பொருளின் வெவ்வேறு தோற்றங்கள் தான் விஞ்ஞானம் வேறு தமிழர் பண்பாட்டு அறிவியல் வேறு அல்ல விஞ்ஞானத்துக்கும் தமிழர் அறிவியலுக்கும் இடையே உண்மையான பிரிவுஏதும் கிடையாது பௌதிக உலகில் விஞ்ஞானம் விதி என்றால், தமிழர் உலகில் தமிழர் அறிவியல் விதியாகும்.



விவசாய விரிவாக்க அதிகாரிகளுக்கு

# நெற் துறையை மேம்படுத்துவதற்கு பயிற்சி

ஐக்கிய நாடுகள் சபையினுடைய உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) 4 மில்லியன் யூரோ நிதியுதவியுடன் RiceUP என்ற தலைப்பில் ஒரு புத்தாக்கத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, அம்பாறை, பதுளை, அம்பாந்தோட்டை மற்றும் பொலன்னறுவை ஆகிய நான்கு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவம் (IPNM) தொடர்பான விவசாய விரிவாக்க அதிகாரிகளுக்கு (AEOs) FAO மற்றும் அதன் பங்காளிகள் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

IPNM இல் AEO களின் பயிற்சியானது, அந்தந்த மாவட்டங்களில் உள்ள நெல் விவசாயிகளுடன் விவசாயத்தில் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்குத் தேவையான திறன்களையும் அறிவையும் அவர்களுக்கு அளிக்கும். இந்த அலுவலர்கள் விவசாயிகளுக்கு முதன்மையான தொடர்பு மையமாயாக பணியாற்றுவார்கள், IPNM நடைமுறைகளை செயல்படுத்துவது குறித்த வழிகாட்டுதலை வழங்குவார்கள், இது மண் முகாமைத்துவம் மற்றும் இரசாயனத்தில் தங்கியிருத்தலைக் குறைக்கும் அதே வேளையில் பயிர் விளைச்சலை அதிகரிக்க கரிம மற்றும் இரசாயன உரங்களின் உகந்த பயன்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

IPNM நடைமுறைகள் குறித்த விவசாய விரிவாக்க அதிகாரிகளுக்கான (AEOs) ஆரம்ப பயிற்சி அமர்வு இன்று பட்டலகொடவில் உள்ள அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து மொத்தம் 300 AEO களுக்கு பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த அமர்வு ஐந்து பயிற்சித் திட்டங்களின் தொடர் தொடக்கத்தைக் குறிக்கிறது. சர்வதேச மற்றும் தேசிய ஆலோசகர்கள், விவசாயத் திணைக்களம், எம்.ஏ.எஸ். எல் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்ட பயிற்சி கையேடு இந்தப் பயிற்சி அமர்வுகளின் அடித்தளமாகச் செயல்படும்.

IPNM என்பது ஒரு நிலையான நில மேலாண்மை நடைமுறையாகும், இது மண்ணின் தரத்தை உறுதிப்படுத்துகிறது, சிதைவைத் தடுக்கிறது மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் போது பயிர் உற்பத்தித்திறனை அதிகரிக்கிறது. FAO இன் IPNM இன் தூண்டல், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்குவதுடன், அத்தியாவசிய உரங்களை அணுகுவதில் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வாக காணப்படுவதோடு உணவுப் பாதுகாப்பைப் பேணுதல். IPNM மற்றும் யூரியா உரத்தை அணுகுவதன் மூலம், சிறு விவசாயி நெல் விவசாயிகள் செலவுகளைக் குறைத்து உற்பத்தியை மேம்படுத்தலாம், இது சிறந்த லாபம் மற்றும் எதிர்கால அதிர்ச்சிகளைத் தாங்கும் தன்மைக்கு வழிவகுக்கும்.

உரம் மற்றும் தரமான விதைகளின் பாதுகாப்பான மற்றும் திறமையான பயன்பாடு உட்பட நிலையான விவசாய நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இலங்கையின் நெல் விவசாயத் துறையில் உற்பத்தித்திறன், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை RiceUP நோக்கமாகக் கொண்டுள்ளது. FAO தனது பங்காளர்களுடன் இணைந்து, இலங்கையின் விவசாயத் துறையின் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் மீள்தன்மையை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ளது.

செலான் வங்கி காலியில்

# வணிக சமூகத்துக்கு வழிகாட்டல்கள்

செலான் வங்கி, சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு (SMEs) ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை வளமானதாக்கி முன்கொண்டு செல்லுதல் ஆகிய நோக்கங்களோடு அண்மையில் தென் மாகாணத்தைச் சேர்ந்த வணிக சமூகத்துக்கு தெளிவுபடுத்தல் நிகழ்வொன்றை ஒழுங்கு செய்திருந்தது. இந்நிகழ்வு காலியில் உள்ள ஆராதனா ஹோட்டலில் நடைபெற்றதோடு, 100க்கு மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டு செலான் வங்கி அதிகாரிகள் வழங்கிய வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளின் நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர்.

உள்நாட்டு வணிகங்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு இந்நிகழ்வானது வணிகத்தின் வெற்றிக்கு அத்தியாவசியமான பல்வேறு முக்கியத் தலைப்புகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. பங்கேற்பாளர்கள் நிதிசார் முகாமைத்துவம் குறித்த பெறுமதியான விடயங்களை அறிந்து கொண்டதோடு, வணிக நடவடிக்கைகளை நீடித்தல் மற்றும் நிலைபேறான வளர்ச்சியை உறுதிப்படுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் கண்டுகொண்டனர். அத்துடன் இந்த உரையாடல்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்துதல், வர்த்தகநாமங்களைக் கட்டியெழுப்பல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கு சமூக வலைதளங்களை எவ்வாறு ஊடகமாக பயன்படுத்தலாம் என்பன பற்றிய விளக்கங்களையும் வழங்கியது. உள்ளூர் அரச நிர்வாகம் மற்றும் அரச முகவர் தரப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அதிகாரிகளும் தமது நுணுக்கமான விடயங்களை பங்கேற்பாளர்களிடம் பகிர்ந்துகொண்டனர். இவர்களில்



போப்பே போத்தல பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் பியுமாலி லியனகே மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் முத்துஹெட்டி கமகே பந்துல ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். காலி மாவட்ட வர்த்தக சம்மேளனம் சார்பாக பிரதம நிறைவேற்று அதிகாரி சாலிய ரொஷான் புஷ்பகுமார மற்றும் செயற்திட்ட முகாமையாளர் கபில சந்தன ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

மீள்நிதிச்சேவை கடன் திட்டங்கள் மற்றும் அவற்றின் வழங்குகை பற்றி வலியுறுத்தப்பட்டமை இந்நிகழ்வின் முக்கிய தருணங்களில் ஒன்றாகும். நிதிரீதியான இயலுமைகளைப் பலப்படுத்துதல் மற்றும் அவர்களது விரிவாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு மீள்நிதிச்சேவை கடன்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றிய விரிவான தகவல்கள் பங்கேற்பாளர்களுக்கு இதன்போது வழங்கப்பட்டன. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் சிறிய நடுத்தர வணிகங்களின் முக்கியத்துவத்தை செலான் வங்கி அங்கீகரிப்பதோடு, அவர்களது அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கும் எளிய நிதித்தீர்வுகளை பெற்றுத்தர எதிர்பார்க்கிறது.

> **வர்த்தகநாமங்களைக் கட்டியெழுப்பல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கு சமூக வலைதளங்களை எவ்வாறு ஊடகமாக பயன்படுத்தலாம் என்பன பற்றிய விளக்கங்களையும் வழங்கியது. உள்ளூர் அரச நிர்வாகம் மற்றும் அரச முகவர் தரப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அதிகாரிகளும் தமது நுணுக்கமான விடயங்களை பங்கேற்பாளர்களிடம் பகிர்ந்துகொண்டனர்**

பல்வேறு வணிக செயன்முறைகளை சீராக்குவதற்கும் எளிதாக்குவதற்கும் கட்டமைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் வழிமுறைகளின் இருப்பை செலான் வங்கி காட்சிப்படுத்துவதன் மூலமாக 'டிஜிட்டல் பரிமாணம்' இன்னுமொரு முக்கிய கருப்பொருளாக உருவெடுத்துள்ளது. பங்கேற்பாளர்களுக்கு புத்தாக்கமான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் கருவிகளை அறிமுகப்படுத்தியதோடு, அவற்றின் மூலமாக அவர்களால் புதிய சந்தைகளுக்குள் நுழைய, உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க மற்றும் வழமையான எல்லைகளுக்கு அப்பால் தமது வாடிக்கையாளர்களை விஸ்தரிக்க முடியும்.

கலிபோர்னியா

# அரிசி ஏற்றுமதி தடையால் அமெரிக்காவில் நெருக்கடி

கடந்த சில வாரங்களாக பெய்து வந்த கனமழை காரணமாக இந்தியாவில் அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கில் மத்திய அரசு, பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. இதனால் அமெரிக்காவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 40 சதவீதமாக உள்ளது. இந்தியாவில் இருந்து 140 நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தச் சூழலில் அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்திருப்பதால் சர்வதேச அளவில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது.



இந்தியாவின் அரிசி ஏற்றுமதி தடை அறிவிப்பு வெளியானதையடுத்து, அமெரிக்காவில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று பொதுமக்களிடம் அச்சம் பரவியது. இதையடுத்து அங்காடிகளில் அரிசி வாங்க மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

பங்களாதேஷ்

# பஸ் கவிழ்ந்ததில் 17 பேர் பலி

பங்காளதேசத்தில் சுமார் 60 பயணிகளை ஏற்றிக்கொண்டு பாஷர் ஸ்மிருதி பரிபாஹன் என்ற பேருந்து பிரோஜ்பூரின் பண்டாரியாவில் இருந்து புறப்பட்டது.

அப்போது 10 மணியளவில் பரிஷால்-குல்னா நெடுஞ்சாலையில் சத்ரகாண்டாவில் உள்ள சாலையோர குளத்தில் கவிழ்ந்து விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், மூன்று குழந்தைகள் உள்பட குறைந்தது 17 பேர் உயிரிழந்தனர். மேலும், 35 பேர் காயமடைந்தனர்.




விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். முதற்கட்ட விசாரணையில், 52 பேர் பயணிக்க கூடிய பேருந்தில் 60 பேர் பயணித்ததே விபத்துக்கான முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது

நைஜீரியா

# 7 நாட்கள் அழுது கின்னஸ் முயற்சி

நைஜீரியாவில் ஒரு நபர் கின்னஸ் உலக சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக ஏழு நாட்கள் தொடர்ந்து இடைவிடாமல் அழுதுள்ளார். இதில் அதிர்ச்சி என்னவென்றால் ஒரு வாரம் முழுவதும் கண்ணீர் சிந்தும் உலக சாதனை முயற்சியில் இடைவிடாமல் அழ முயன்ற Tembu Ebere என்ற அந்த நபர் தற்காலிகமாக சில நிமிடங்கள் பார்வையை இழந்தார்.

மேலும் இந்த விபரீத முயற்சியைத் தொடர்ந்து, அவர் கடும் தலைவலி, முகம் மற்றும் கண்கள் வீக்கம் உள்ளிட்ட சில பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டார்.



சாதனை முயற்சியில் தான் எதிர்கொண்ட பிரச்சனைகள் பற்றி கூறிய Tembu Ebere, தொடர்ந்து அழுதது தன்னை சுமார் 45 நிமிடங்களுக்கு பகுதியளவு பார்வையற்றவராக மாற்றியதாக தெரிவித்தார்.

எனது சாதனை முயற்சியை கைவிட தயாராக இல்லாத காரணத்தால், இலக்கை அடைய வியூகம் வகுத்து, என் அழுகையை குறைக்க வேண்டியிருந்தது என்று கூறினார். சிரமங்களை எதிர்கொண்ட போதிலும் தனது இலக்கை நோக்கி செல்வதில் உறுதியாக இருந்ததாகவும் கூறினார்.

இதில் கொடுமை என்னவென்றால் Guinness World Records அமைப்பு இவரது இந்த முயற்சியை கணக்கில் எடுத்து கொள்ளாது என்பது தான். ஏனென்றால் இந்த நைஜீரிய மனிதர் கின்னஸ் உலக சாதனைக்காக அதிகாரப்பூர்வ பதிவுச்செய்தல் மற்றும் விண்ணப்பித்தல் உள்ளிட்ட எதையும் பின்பற்றவில்லை என கூறப்படுகிறது.

லாகூர்

# தகாத உறவில் திடீர் மரணம்

பாகிஸ்தான் நாட்டில் லாகூர் மாகாண பொலிஸ்மா அதிபராக பணியாற்றி வருபவர் ஷெரிக் ஜமால். இவருக்கு மனைவியும் ஒரு மகளும் உள்ளனர். ஆனால், மனைவி, மகளை விட்டு பிரிந்த ஷெரிக் ஜமால் லாகூரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் தனியே வசித்து வருகிறார்.

இதனிடையே, அவருக்கும் பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்தில் அதிகாரியாக பணியாற்றி வரும் பெண்ணுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது. இருவரும் அவ்வப்போது தனிமையில் சந்தித்துள்ளனர்.

இந்நிலையில், லாகூரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஷெரிக் ஜமாலும் தேர்தல் ஆணைய பெண் அதிகாரியும் தனிமையில் இருந்துள்ளனர். அப்போது, பாலியல் உணர்வை தூண்டும் மாத்திரைகளை ஜமால் அதிக அளவில் சாப்பிட்டுள்ளார். அப்போது திடீரென ஜமாலுக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த பெண் அதிகாரி உடனடியாக ஜமாலை உடனடியாக லாகூரில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஜமால் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர்.



இந்த சம்பவம் குறித்து அறிந்த பொலிஸார், பெண் தேர்தல் அதிகாரியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், உயிரிழந்த ஷெரிக் ஜமால் வசித்து வரும் குடியிருப்பில் சோதனை செய்த பொலிஸார் அங்கிருந்து தடைசெய்யப்பட்ட பாலியல் மாத்திரைகளை பறிமுதல் செய்துள்ளனர்.

ஜெய்ப்பூர்

# 3 ஆம் பாலினத்தவருக்கு முதல் பிறப்பு சான்றிதழ்

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த 19 வயதான நூர் ஷெகாவத் 3ஆம் பாலினத்தவர் ஆவார். இவர் கடந்த 19 ஆம் திகதி 3 ஆம் பாலினத்தவர் என அதிகாரப்பூர்வமாக பிறப்புச் சான்றிதழைப் பெற்றுள்ளார்.

இவர் பிறக்கும்போது ஆண்ணென பிறப்புச் சான்றிதழ் பெறப்பட்டிருந்தது. மேலும் ராஜஸ்தான் மாநிலத்தில் 3-ம் பாலினத்தவர் என பிறப்புச் சான்றிதழ் பெற்ற முதல் நபர் இவர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.



இதுகுறித்து நூர் ஷெகாவத் கூறியதாவது: ராஜஸ்தான் மாநிலத்தில் 3-ம் பாலினத்தவர் என்ற பிறப்புச் சான்றிதழை பெற்ற முதல் நபர் நான்தான். இது எனக்குப் பெருமையளிக்கிறது. எல்லோரும் என்னைப் பாராட்டுகின்றனர். ஆனால் 3 ஆம் பாலினத்தவர் என்பதால் எனது குடும்பத்தாரே என்னை ஏற்கவில்லை. அடித்து துன்புறுத்தினர் என்றார்.

# ஒரே நேரத்தில் கணவர், மாமனாருடன் திருமணம்

ஒரே நேரத்தில் கணவரையும், அவரது தந்தையையும் ஒரு பெண் திருமணம் முடித்துள்ளார். இது தொடர்பான தகவல்கள் சமூக வலைதளங்களில் கவனம் பெற்று வருகிறது. விருந்து, இசை நிகழ்ச்சிகளுடன் ஏராளமான பொருட்செலவில் தற்காலத்தில் திருமணங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றில் குழப்பங்களுக்கும் பஞ்சம் இருக்காது.

அந்த வகையில் ஆஸ்திரேலியாவை சேர்ந்த கிம் என்பவர் ஒரே நேரத்தில் 2 நபர்களை திருமணம் முடித்துள்ளார். ஒருவர் அவருக்கு நிச்சயம் பேசி முடிக்கப்பட்ட ஆண். மற்றொருவர் அந்த ஆணின் தந்தை.

இந்த சம்பவம் எப்படி நடந்தது என்பது குறித்து சுவாரசிய தகவல்கள் வெளிவந்துள்ளன. திருமண வழக்கப்படி அதற்கு சாட்சியாக 2 நபர்களின் கையெழுத்து தேவை. அதில் ஒன்றை கிம்மின் தாயார் பதிவிட்டுள்ளார். இன்னொரு கையெழுத்தை மணமகனின் தந்தை போட்டுள்ளார். இங்குதான் குழப்பம் நடந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது சாட்சி கையெழுத்து பதிவிட வேண்டிய இடத்திற்கு பதிலாக மணமகன் என்ற இடத்தில் அவருடைய தந்தை கையெழுத்து போட்டுள்ளார். திருமண சான்றிதழ் அடிப்படையில் 2 நபர்களை கிம் திருமணம் முடித்து விட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் நல்ல வேளையாக திருமணம் தொடர்பான சட்டப் பத்திரத்தில் தவறு ஏதும் நடக்கவில்லை. இந்த ருசிகர சம்பவம் ஆஸ்திரேலியாவில் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

## இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# போராடும் மேற்கிந்தியத் தீவுகள்

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் போராடுகிறது.

போர்ட் ஒஃப் ஸ்பெய்னில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியா வென்றிருந்த நிலையில், இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா, விராட் கோலியின் 121, அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் 80, இரவீந்திர ஜடேஜாவின் 61, யஷஸ்வி ஜைஸ்வாலின் 57, இரவிச்சந்திரன் அஷ்வினின் 56 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 438 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கேமார் றோச், ஜோமெல் வொரிக்கான் ஆகியோர் தலா 3, ஜேஸன் ஹோல்டர் 2, ஷனொ கப்ரியல் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.




பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள், நேற்று முன்தின மூன்றாம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில், அலித் அதனஸே 37 ஓட்டங்களுடனும், ஹோல்டர் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக அணித்தலைவர் கிறெய்க் பிறத்வெய்ட் 75 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார். பந்துவீச்சில், இரவீந்திர ஜடேஜா 2, அறிமுக வீரர் முகேஷ் குமார், இரவிச்சந்திரன் அஷ்வின், மொஹமட் சிராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

## டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

# றோயலை வென்ற திருத்துவக் கல்லூரி

Dialog SCHOOLS RUGBY

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், பல்லேகலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற றோயல் கல்லூரியுடனான பிரட்பி முதலாவது சுற்றுப் போட்டியாய் அமைந்த போட்டியில் 13-10 என்ற புள்ளிகள் கணக்கில் திருத்துவக் கல்லூரி வென்றது. இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற விஞ்ஞானக் கல்லூரியுடனான போட்டியில் 29-0 என்ற புள்ளிகள் கணக்கில் சென். பீற்றர்ஸ் கல்லூரி வென்றது.

இந்நிலையில், ஹவ்லொக் பார்க்கில் நடைபெற்ற போட்டியில் 24-11 என்ற புள்ளிகள் கணக்கில் வெஸ்லி கல்லூரியை இசிப்பத்தன கல்லூரி வென்றது.

## இலங்கை கிரிக்கட் நடுவர்களாக

# யு.டிபி.எம்-இல் அங்கம் வகிக்கும் 13 நடுவர்கள் தெரிவு


ஹஸ்பர்

இலங்கை கிரிகட் நடுவர்கள் தரம் - 5 இற்கான போட்டிப் பரீட்சையில் யு.டிபி.எம் நடுவர்கள் 13 பேர் தோற்றி, தோற்றிய அனைவரும் வெட்டுபுள்ளி 70 இற்கு மேல் பெற்று சிறப்பு சித்தி எய்தனர். இந்த நிகழ்வானது மூதூர் கிரிக்கெட்டின் ஒரு இமாலய சாதனையாக கருதப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களினை மையப்படுத்தி இலங்கை கிரிக்கட் சபையால் நடாத்தப்பட்ட மேற்படி நடுவர் போட்டிப் பரீட்சையில் 95 புள்ளிகளை பெற்று நஹீம் இஜாஸ் அஹமட் பரீட்சைக்கு தோற்றிய 198 பேரில் முதலிடத்தினை பெற்று மூதூர் மண்ணுக்கும் திருகோணமலை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். மேலும் கிழக்கு மாகாணத்துக்கான முதல் நான்கு இடங்களையும் யு.டிபி.எம் அமைப்பின் அங்கத்தவர்கள் தக்கவைத்து மேலும் மூதூருக்கும் திருமலை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தனர். நஹீம் இஜாஸ் அஹமட் இற்கு அடுத்ததாக கிழக்கு மாகாணத்தின் முறையே 2, 3, 4 ஆவது இடங்களினை ஐதுரூஸ் முஹம்மட் நஹ்பீஸ் 91 புள்ளிகள், பசுருதீன் முஹமட் நஸீம் 91 புள்ளிகள் மற்றும் அப்துல் லதீப் முஹம்மட் பர்சாத் 90 புள்ளிகள் ஆகியோர்களே குறித்த சாதனையினை நிகழ்த்தியவர்கள் ஆவார்கள்.





சுமார் எட்டு ஆண்டுகளுக்கு பிறகு இலங்கை கிரிக்கெட் சபையால் நடாத்தப்பட்ட மேற்படி பரீட்சையில் திருமலை மாவட்டத்தில் மொத்தம் 20 பேர் வரையில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1. 95 புள்ளிகள் - நஹீம் இஜாஸ் அஹமட்
2. 91 புள்ளிகள் - ஐதுரூஸ் முஹம்மட் நஹ்பீஸ்
3. 91 புள்ளிகள் - பசுருதீன் முஹமட் நஸீம்
4. 90 புள்ளிகள் - அப்துல் லதீப் முஹம்மட் பர்சாத்
5. 89 புள்ளிகள் - தௌபீக் முஹம்மட் பயாஸ்
6. 86.5 புள்ளிகள் - ஜமால்தீன் முஹம்மட் ஜஸ்றூன்
7. 86 புள்ளிகள் - ஜஹாங்கீர் முஹம்மட் சப்றாஸ்
8. 85 புள்ளிகள் - ஜீவரத்னம் கார்தீபன்
9. 83.5 புள்ளிகள் - இமாம் சாஹிப் முஹம்மட் நஜ்றான்
10. 83 புள்ளிகள் - புஹாரி முஹம்மட் சஜான்
11. 82 புள்ளிகள் - முஹம்மட் ரபீக் முஹம்மட் ஹில்மி
12. 82 புள்ளிகள் - கசுதீன் முஹம்மட் அஜ்வாத்
13. 81.5 புள்ளிகள் - முஹம்மட் ரபீக் முஹம்மட் சிஹான்

மேற்படி சித்தியடைந்த நடுவர்களுக்கான நியமனங்கள் மற்றும் சான்றிதல் வழங்கும் நிகழ்வுகள் கொழும்பு கெத்தாராம ஆர் பிரேமதாஸ சர்வதேச கிரிக்கட் மைதானத்தின் கேட்போர் கூடத்தில் மிக விரைவில் நடைபெறவுள்ளது.




## சிநேகபூர்வ போட்டியில்

# ஆர்சனலை வீழ்த்திய மன்செஸ்டர் யுனைட்டட்

ஐக்கிய அமெரிக்காவில் நேற்று அதிகாலை நடைபெற்ற சக இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனலுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது. யுனைட்டெட் சார்பாக, ப்ரூனோ பெர்ணாண்டஸ், ஜடோன் சஞ்சோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 24 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.